

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில் ரூபாய் 170.22 கோடி மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மெ.டன் கொள்ளளவுடன் மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளத்திற்கும் அடிக்கல் நாட்டினார். அதைத் தொடர்ந்து – உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முன்னாள் ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் ஆகியோர் நடுவூர் கிராமத்தில் நவீன நெல் சேமிப்புக் தளத்திற்கு அடிக்கல் நாட்டிய காட்சி இது! சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், சதய விழா குழுத்தலைவர் செல்வம், செயற்பொறியாளர் கே.ஆர்.முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### கடந்த 4 ஆண்டுகளில் 43 லட்சம் மகளிர் பயனடைந்துள்ளனர்!

# கிருஷ்ணகிரியில் பெண் விவசாயிகள் மாநாடு!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - அர.சக்கரபாணி மற்றும் தே.மதியழகன்- ஒய்.பிரகாஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, டிச. 14-

கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில். கிருஷ்ணகிரி மாவட்ட பெண் விவசாயிகள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு மாநில பொதுச்செயலாளர் கோமலா தலைமை வகித்தார். மாநில தேசிய மகளிரணி செயலாளர் சக்தி சங்கர் வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகளின் கூட்டு இயக்க தலைவர் தெய்வசிகாமணி மாநாட்டை தொடங்கி வைத்தார். இதில் வேளாண்மைதுறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த மாநாட்டில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது: திமுக ஆட்சியில் மா மற்றும் நெல் விளைச்சல் என அனைத்து விளைச்சலும் அமோகமாக உள்ளது. மா சீசனில் விளைச்சல் அதிகமாக இருந்த போதும் ஏற்றுமதி தொய்வு காரணத்தினால் விலை குறைந்தது. அரசு தனியார் ஆலைகளை அழைத்து பேசி ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாம்பழம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்தால் விலையும் அதிகரிக்கும். முன்பெல்லாம் மாம்பழ சீசனில் நாம் அதிக அளவில் மாம்பழங்களை சாப்பிடுவோம், மா சாறு குடிப்போம். ஆனால், தற்போது அதிகப்படியான மக்களுக்கு சர்க்கரை வியாதி இருப்பதால் மா சாப்பிடுவதிலும் மாம்பழ சாறு குடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அதனால் மாம்பழங்கள் தற்போது தேக்கம் அடைகின்றன. இந்த சீசனில் மா விளைவித்தவர்களுக்கும் பிரச்சனை. மாம்பழத்தை சின்னமாக வைத்திருக்கும் கட்சிக்கும் பிரச்சனை, என்றார்.

தொடர்ந்து, அமைச்சர்கள் எம்ஆர்கே பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

திமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் வேளாண்மை உழவர் நலத்துறையின் 27 திட்டங்கள் மூலமாக வேளாண்மை துறை சார்பில் 24 லட்சத்து 18 ஆயிரத்து 358 மகளிர்க்கும் தோட்டக்கலைத்துறை சார்பில் 18 லட்சத்து 96 ஆயிரத்து 456 மதிப்பில் என மொத்தம் 43 லட்சத்து 14 ஆயிரத்து 814 பெண்கள் பயனடைந்து உள்ளனர். மேலும், விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை வழங்கியது. 12 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மா, தென்னை, மஞ்சள் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உடனடியாக விலை நிர்ணயம் செய்தும், பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கியும் விவசாயிகளுக்கு நன்மை செய்தது தமிழக அரசு.

மேலும், வடகிழக்கு பருவமழையால் நெல்லில் ஈரப்பதம் அதிகமாக இருப்பது குறித்து மத்திய அரசின் 3 குழுவினர் ஆய்வு செய்தனர். நெல்லில் ஈரப்பதம் 22 சதவீதம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். ஆய்வுக்குழுவினரும், சாதகமான பதிலை கூறி சென்றனர். இதுகுறித்து தமிழக முதல்வர், பிரதமருக்கு கடிதம் எழுதினார். ஆனால், மத்திய அரசு நெல் கொள்முதல் மற்றும் ஈரப்பதம் 22 சதவீதமாக உயர்த்த அனுமதி கொடுக்கவில்லை. டெல்டா மாவட்டத்தில் எதிர்கட்சி தலைவர், பாஜக மாநில தலைவர் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். பாமக தலைவர் அன்புமணி அறிக்கைவிட்டார். 3 பேரும் பாஜக கூட்டணியில் உள்ளனர். அவர்கள் நினைத்தால் வாங்கி கொடுக்கலாம். ஆனால், நெல்லை வைத்து அரசியல் செய்தால் எடுபடாது. மேலும், கடந்த அதிமுக, ஆட்சியில் சன்ன நெல் குவிண்டாலுக்கு ரூ.70 பொதுவான வகை நெல்லுக்கு ரூ.50 ஊக்கத்தொகையாக வழங்கினர். ஆனால் திமுக அரசு சன்ன ரக நெல்லுக்கு ரூ.156ம், பொது ரகத்திற்கு ரூ.131ம் வழங்கப்படுகிறது. கடந்த, அதிமுக 10 ஆண்டு கால ஆட்சியில் செய்ததை விட இது அதிகம். மேலும் எங்கெல்லாம் நெல்லுக்கு நேரடி கொள்முதல்மையம் கேட்டார்களோ அங்கெல்லாம் கொள்முதல் மையங்களும் அமைக்கப்பட்டன. எப்போதும் .விவசாயிகளின் அரணாக திமுக அரசு உள்ளது, என்றனர்.

இதில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் செங்குட்டுவன். மேற்கு மாவட்ட துணை செயலாளர் முருகன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனவாசன் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ”தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரையை கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, கும்பகோணம் மாநகரப் பகுதிகளில் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், பகுதிச் செயலாளர்கள் டி.வி.கிருஷ்ணமூர்த்தி, எஸ.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், மு.கண்ணன் மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.சிவானந்தம், எஸ்.இரவிச்சந்திரன் உள்ளிட்ட மண்டலக்குழு தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஒன்றியம், செக்காரனு கிராமத்தில் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் மண்சலையாக இருந்தது. அந்த பகுதி மக்கள் பயன் பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக கனிமவள நிதியின் கீழ் 59 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பில் புதியதாக அமைக்கப்படவுள்ள தார்ச் சாலை பணிகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் பணிகளை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர் நாகேஷ் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், உஞ்சினி ஊராட்சியில் உஞ்சினி – வாரியங்காவல் சாலை கி.மீ 2/0 – 4/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிபடுத்துதல் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

### தங்கள் திருட்டை மறைப்பதற்காக மற்றவர்களை குறை கூறி

# திசை திருப்பும் வேலையைத் தொடர்ந்து செய்து வருகிறார் அமித்ஷா!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றச்சாட்டு!

அரியலூர், டிச.14-

அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே உள்ள சன்னாசி நல்லூரில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்பொழுது அ.தி.மு.க. ஆட்சியை பற்றி தி.மு.க. கூட குறை சொல்ல முடியாத அளவிற்கு சிறப்பான ஆட்சியை நடத்தி இருப்பதாக எடப்பாடி பழனிச்சாமி கூறியது குறித்த கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமி சிறப்பான ஆட்சியை கொடுத்திருப்பார் என்றால் மீண்டும் மக்கள் அவரை ஆதரித்து இருப்பார்கள். மக்களே தூக்கி எறிந்த ஆட்சிதான். நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமலே ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் அது அவர் தான். மொத்த இந்தியாவையும் குலுங்க செய்தது தூத்துக்குடி துப்பாக்கி சூடு தான். அது நடந்ததை டிவில பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என கூறினார். மக்களின் பிரச்சினை கள் எதுவும் அவர் கவனத்திற்கு கொண்டு



செல்லப்படவில்லை. அதனால் தான் அவரது ஆட்சியை அகற்றி விட்டு திராவிட முன்னேற்ற கழக ஆட்சியை மக்கள் அமைத்தார்கள்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் நேருவும் இந்திரா காந்தியும் வாக்கு திருட்டால் தான் வெற்றி பெற்றார்கள் என்ற அமித்ஷாவின் பேச்சு குறித்த கேள்விக்கு தற்பொழுது நடைபெறும் தேர்தலில் வாக்குத்திருட்டு நடைபெறுகிறது என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தொடர்ந்து ஆதார்பூர்வமாக எடுத்து வைத்து வருகிறார். ஆனால் அமித்ஷா சொல்லி இருக்கிற பதில் மிக மிக பொருத்தமற்ற பதிலாகும் இன்றைக்கு அமித்ஷா சொல்வதை ஏற்கனவே அவரது கட்சித் தலைவர்கள் சொல்லி இருக்கலாம் பா.ஜ.க.விலேயே பிரதமராக வாஜ்பாய் இருந்தார் அவர் சொல்லிருக்கலாம் யாரும் சொல்லாததை இவர்கள் பத்தாண்டு ஆட்சியில் இருக்கும்போது முன்பாக சொல்லாததை தற்போது சொல்கிறார் என்றால் தங்கள் திருட்டை மறைப்பதற்காக மற்றவர்களை குறை கூறி திசை திருப்பும் வேலையை அமிஷா தொடர்ந்து செய்து வருகிறார். இதைப் போன்று தான் அனைத்து விஷயங்களிலும் திசை திருப்பும் பணியை செய்வார். மக்கள் இதற்கு பதில் அளிப்பார்கள்.

திருப்பரங்குன்றம் குறித்து ஆந்திரா துணை முதலமைச்சர் பவன் கல்யாண் கூறி வரும் கருத்து குறித்த கேள்விக்கு பாஜக எப்பொழுதுமே ஒவ்வொருவரை பிடித்து வந்து ஒவ்வொரு ஸ்டேடில் வைத்து அவர்களை வைத்து அரசியல் பண்ணுவார்கள் முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி அண்ணாமலையை கொண்டு வந்தார்கள் தற்போது ஆந்திரா துணை முதல்வர் இங்க ட்ரான்ஸ்பர் பண்ணுவாங்கல அப்படின்னு தெரியல. தமிழ்நாட்டினுடைய கலநிலவரம் பவன் கல்யாணத்துக்கு தெரியாது. அவர் ஆந்திராவில் இருப்பதாக நினைத்துக் கொண்டு பேசியிருக்கிறார் எனவே பவன் கல்யாண் மூலமாக இங்கு ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. நினைத்தால் அது நடக்காது இது தமிழ் மண் என கூறினார்.

வரும் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் பலமான கூட்டணி அமையும் என்ற எடப்பாடி பழனிச்சாமி பேச்சு குறித்த கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இருந்து இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார் பார்க்க தான் போறோம் சட்டமன்ற தேர்தல் வரப்போகிறது திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெற்று திராவிட மாடல் முதல்வர் ஆட்சி அமைக்க தான் போகிறார் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

### மாவட்ட வாரியாக

# ‘மிஷன் சக்தி’ திட்டத்தில் பயன் பெற்றவர்கள் எவ்வளவு பேர்?

### மக்களவையில் - திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, டிச.13–

மிஷன் சக்தி திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பயன் பெற்றவர்கள் எவ்வளவு பேர் என்று மக்களவையில் திருவண்ணா மலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:–

மிஷன் சக்தி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்/கூறுகள், குறிப்பாக அதன் ‘சம்பல்’ மற்றும் ‘சமர்த்யா’ செங்குத்துகளின் கீழ் விவரங்கள்;

தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் மிஷன் சக்தியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பயனாளிகளின் எண்ணிக்கை/ தன்மை;

மாவட்ட அளவில் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகளுக்கு இடையே திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதில் ஏதேனும் சவால்களை அரசாங்கம் கண்டறிந்துள்ளதா;

அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் குறிப்பி ட்ட மாவட்டங்களில் பெண்களின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிப்பை வலுப்படுத்த மிஷன் சக்தி மூலம் அரசு எடுத்த/ எடுக்க முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

பதில்: அதற்கு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் இணையமைச்சர் (ஸ்ரீமதி



சாவித்ரி தாக்கூர்) அளித்த பதில் வருமாறு:–

(அ) முதல் (இ): பெண்கள் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தலுக்கான தலையீடுகளை வலுப்படுத்துவதை மிஷன் சக்தி நோக்கமாகக் கொண்டுள்ளது. மிஷன் சக்தி என்பது பெண்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான ‘சம்பல்’ மற்றும் பெண்களின் அதிகாரமளித்தலுக்கான ‘சமர்த்யா’ ஆகிய இரண்டு செங்குத்துகளைக் கொண்டுள்ளது. மிஷன் சக்தி என்பது மத்திய அரசின் நிதியுதவி திட்டமாகும், மேலும் செயல்படுத்தல் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களைப் பொறுத்தது.

சம்பல் சம்பல் செங்குத்துத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன: வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் துன்பத்தில் உள்ளவர்களுக்கு, தனியார் மற்றும் பொது இடங்க ளில் ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைந்த முறையில் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைந்த ஆதரவு மற்றும் உதவியை வழங்குவதற்கான ஒன் ஸ்டாப் சென்டர்கள் (OSC); பெண்கள் ஹெல்ப் லைன்கள் (181 WHL) என்பது ERSS (112) மற்றும் பிற ஏற்கனவே உள்ள ஹெல்ப்லைன்கள்/நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட 24 x 7 x 365 கட்டணமில்லா அவசர/அவசரமற்ற பதில் அமைப்பாகும்;

பிறப்பு நேரத்தில் குறைந்து வரும் பாலின விகிதம் (SRB) மற்றும் வாழ்க்கைச் சுழற்சி தொடர்ச்சியில் பெண்கள் மற்றும் பெண்களின் அதிகாரமளித்தல் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய உதவும் நோக்கில் தொடங்கப்பட்டது. நாரி அதாலத் என்பது நீதியை உறுதி செய்வதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதையும் மாற்று தகராறு தீர்வு, குறை தீர்க்கும் தீர்வு, ஆலோசனை, சான்றுகள் அடிப்படையிலான முடிவெடுத்தல், அழுத்தக் குழு தந்திரோபாயங்கள், பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம் மற்றும் சமரசம் போன்ற சேவைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு முன்னோடி முயற்சியாகும்.

சமர்த்யா ‘சமர்த்யா’ திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன: பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) என்பது ஒரு மகப்பேறு நலத் திட்டமாகும், இதன் கீழ் முதல் குழந்தை மற்றும் இரண்டாவது பெண் குழந்தைக்கு நேரடி பலன் பரிமாற்றம் (DBT) முறையில் பயனாளிகளுக்கு பண ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது; சக்தி சதன் என்பது கடத்தப்பட்ட பெண்கள் உட்பட துன்ப சூழ்நிலைகளில் உள்ள பெண்களுக்கான ஒருங்கிணைந்த நிவாரண மற்றும் மறுவாழ்வு இல்லமாகும்; சகி நிவாஸ் என்பது பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிட வசதியை வழங்குகிறது; குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலில் தரமான குழந்தை காப்பக வசதியை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட பால்னா மற்றும் சங்கல்ப்: தேசிய அளவில், மாநில மற்றும் யூனியன் பிரதேச அளவில் மற்றும் மாவட்ட அளவில் பெண்களுக்கான திட்டங்கள் மற்றும் திட்டங்களை HEW துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பதை எளிதாக்குகிறது.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பு, பாதுகாப்பு, அதிகாரமளித்தல் மற்றும் கல்வி ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் ஒரு விரிவான, பன்முக அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது. மிஷன் சக்தி திட்டத்தின் பல்வேறு கூறுகளின் கீழ் திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள் உட்பட தமிழ்நாட்டில் பயனாளிகளின் விவரங்கள் தொடக்கத்திலிருந்தே இணைப்பில் உள்ளன.

இவ்வாறு அவர் பதில ளித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தமிழ்நாடு முன்னேற தேவை என்று உணர்ந்து, கரூர் வடக்கு பகுதி, 3வது வார்டு, அதிமுக மீனவர் அணி இணைச் செயலாளர் ரமேஷ், மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தங்களை கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்..